THANZEEL ACADEMY
FOR ISLAMIC STUDIES

THANZEEL ACADEMY
DEPARTMENT OF DAWA
thanzeeledu@gmail.com

முஹர்ரம் மாதம்

ஆக்கம்:
ஹிஸ்புல்லாஹ் அன்வாரி



முஹர்ரம் மாதம்

ஆக்கம்:
ஹிஸ்புல்லாஹ் அன்வாரி

நூல் விபரம்

நூலின் பெயர்	: முஹர்ரம் மாதம்
ஆசிரியர்	: JM ஹிஸ்புல்லாஹ் அன்வாரி
மொழி	: தமிழ்
பதிப்பு	: 20.07.2023
பதிப்புரிமை	: தன்ஸீல் அகடமி
பக்கங்கள்	:
நூல் வடிவமைப்பு	: தன்ஸீல் அகடமி
வெளியீடு	: தன்ஸீல் அகடமி

தன்ஸீல் அகடமியின் வாட்சப் குழுமத்தில் இணைய பின்வரும் QR Code ஐ **ஸ்கேன்** செய்யவும் அல்லது **கிளிக்** செய்யவும்

THANZEEL
ACADEMY

தன்ஸீல் அகடமியின் டெலிகிராமில் இணைய பின்வரும் QR Code ஐ **ஸ்கேன்** செய்யவும் அல்லது **கிளிக்** செய்யவும்

THANZEEL
ACADEMY

பொருளடக்கம்

தன்ஸீல் அகடமி அறிமுகம்

தன்ஸீல் அகடமியானது ஆன்லைன் மூலமாக மக்கள் தூய இஸ்லாத்தையும், அதோடு தொடர்பான அறிவுகளையும் பயில்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிறுவனமாகும். இது தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறுகிறது. இலங்கை உட்பட வெளிநாடுகளில் இருந்தும் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் கல்விபயில்கிறார்கள்.

தன்ஸீல் அகடமியின் பிரிவுகள்:

அ. அல்குர்ஆன் கற்கைள் பிரிவு
- சிறுவர்களுக்கான அல்குர்ஆன் வாசிப்புப் பயிற்சி
- பெரியோர்களுக்கான அல்குர்ஆன் வாசிப்புப் பயிற்சி
- அல்குர்ஆன் திலாவத்
- தஜ்வீத்
- அல்குர்ஆன் மனனம்

ஆ. இஸ்லாமிய கற்கைகள் பிரிவு
- இஸ்லாமிய பொருளியல்
- இஸ்லாமிய உளவியல்
- இஸ்லாமிய சமூகவியல்

இ. தஃவாப் பிரிவு

ஈ. மொழிபெயர்ப்பு மற்றும் மொழியாக்கப் பிரிவு

உ. தொழிற்கல்வி கற்கைகள் பிரிவு

தன்ஸீல் அகடமியானது தஃவாப் பிரிவு மூலம் இஸ்லாமிய வகுப்புகள், இஸ்லாமிய நூல் வெளியீடு, கட்டுரைகள், சமகால நிகழ்வுகள் தொடர்பான போஸ்டர்கள் போன்றவற்றை வெளியிடுகிறது.

அந்த வரிசையில் முஹர்ரம் மாதம் எனும் நூலையும் வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது.

நிறுவனர்
ஜே.எம். ஹிஸ்புல்லாஹ் அன்வாரி
thanzeeledu@gmail.com
+94 740 86 00 22

முன்னுரை

புகழ் அனைத்தும் அகிலங்களின் இரட்சகனாகிய அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தானது. அவனின் அடியாரும், தூதருமாகிய முஹம்மத் ﷺ அவர்கள் மீதும், அவரின் குடும்பத்தார்கள், தோழர்கள், மறுமை நாள் வரை அவரைப் பின்பற்றுகின்ற அனைவருக்கும் அல்லாஹ்வின் சாந்தியும், பரக்கத்தும் என்றென்றும் உண்டாவதாக!

முஹர்ரம் மாதம் என்பது அரேபிய சமூகத்தில் இஸ்லாத்திற்கு முன்னிருந்தே புலக்கத்தில் இருந்த ஒரு மாதமாகும். ஆரிபா இன அரேபியர்கள்[1] இம்மாதத்தை «அல்முஃதமிர்» எனப் பெயரிட்டிருந்தனர். முஸ்தஃரிபா இன அரேபியர்கள்[2] «ஸஃபருல் அவ்வல்» எனப் பெயரிட்டிருந்தனர். அன்றைய காலத்திலிருந்தே இம்மாதத்தை புனித மாதமாக அவர்கள் சிறப்பித்து வந்துள்ளார்கள். சந்திர சுழற்சியை அடிப்படையாக கொண்ட அரேபிய நாட்காட்டி முறையில் முஹர்ரம் மாதம் என்பது முதலாம் மாதமாகும்.

ஆனால் ஜாஹிலிய்யாக் கால அரேபியர்கள் தமது விருப்பத்திற்கு ஏற்ப முஹர்ரம் மாதத்தை மாற்றியமைத்துள்ளனர். யுத்தம் செய்ய ஆயத்தமாக இருக்கும் போது அது முஹர்ரம் மாதமாக இருந்தால் அதை அடுத்த மாதத்திற்கு மாற்றிவிட்டு, யுத்தம் செய்வார்கள். யுத்தத்தை நிறுத்த நினைத்தால் உடனே அடுத்த மாதத்தை முஹர்ரமாக அறிவிப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு வருடமும் முஹர்ரம் மாதம் மாறிக்கொண்டே இருக்கும்.

இஸ்லாம் வந்த பின் மாதங்களை தமது விருப்பத்திற்கு ஏற்ப மாற்றும் முறை தடுக்கப்பட்டது. உமர் رضي الله عنه அவர்கள் ஹிஜ்ரி நாட்காட்டியை ஆரம்பித்த பிறகு மாதங்களை மாற்றியமைக்கும் முறை முற்றாக வழக்கொழிந்து விட்டது. அன்றிலிருந்து இன்று வரை ஒவ்வொரு

1 ஆரிபா இன அரேபியர்கள் யமன் பிரதேசத்தில் வசித்து வந்த கஹ்தான் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நூஹ் அலை அவர்களின் வம்சாவளியில் வந்தவர்கள்.

2 முஸ்தஃரிபா இன அரேபியர்கள் அத்னான் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் இஸ்லமாஈல் அலை அவர்களின் வம்சாவளியில் வந்தவர்கள். இஸ்மாஈல் அலை அவர்கள் ஜுர்ஹும் எனும் பாஇதா இன அரேபியர் குளத்தில் திருமணம் முடித்து, அவர்கள் மூலம் அரபு மொழியைப் படித்து, அரேபியர்களாக மாறினர்.

மாதங்களும் அவற்றின் சரியான வரிசையிலே காணப்படுகின்றன. திகதி அடிப்படையிலான வணக்க வழிபாடுகளை சரியாக மேற்கொள்வதற்கு இதுவே இலகுவான முறையாகும்.

ஆரம்பம் முதல் பிரச்சினைக்குரிய மாதமாக இருந்த முஹர்ரம் மாதம் நபி ஸல் அவர்களின் வருகைக்குப் பின் சீர்படுத்தப்பட்டு, தற்போது மீண்டும் பல புதிய பிரச்சினைகள் உருவாகியுள்ள மாதமாக மாறியுள்ளது. அப்பிரச்சினைகள் யாவை? எனவும், அவற்றிற்கான இஸ்லாமிய தீர்வுகள் என்ன? எனவும், இஸ்லாம் இம்மாதத்தை எவ்வாறு பயன்படுத்துமாறு கூறியுள்ளது? எனவும் ஆராய்வதே இந்நூலின் நோக்கமாகும்.

இச்சிறு முயற்சியை பயனுள்ளதாக மாற்றுமாறும், அல்லாஹ்வின் திருமுகத்தை நாடிய செயலாகவும், சுவன இன்பங்களை வெற்றி கொள்வதற்கான காரணியாகவும் இதை ஆக்குமாறும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறோம். நலவுகளோ, கெடுதிகளோ அவனின் நாட்டத்தில் இல்லாமல் நிகழ்வதில்லை. அல்லாஹ் எம் அனைவரது நல்ல செயல்களையும் ஏற்று, எம்மையும், எமது நல்ல செயல்களையும் பொருந்திக்கொண்டு, மறுமையில் அல்ஃபிர்தவ்ஸ் எனும் சுவனத்தில் எம் அனைவரையும் நுழைவிப்பானாக.

JM ஹிஸ்புல்லாஹ் அன்வாரி
நிறுவனர்,
தன்ஸீல் அகடமி

முஹர்ரம் மாதம்

நபி ﷺ அவர்களின் சமூகத்தினருக்கு பன்மடங்கு நன்மைகளை இலகுவில் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி அல்லாஹ் குறிப்பிட்ட சில இரவுகளையும், நாட்களையும், மாதங்களையும் ஏற்படுத்தியுள்ளான். அதில் மிக முக்கியமான ஒன்றே இம் முஹர்ரம் மாதமாகும். இதற்கு அல்லாஹ்வின் மாதம் எனவும் கூறப்படும். ஹிஜ்ரி நாட்காட்டியில் முதல் மாதமாக இருக்கும் இம்மாதம் அல்லாஹ்வால் கண்ணியப்படுத்தப்பட்ட நான்கு மாதங்களுள் ஒன்றாகும். அல்லாஹ் கூறுகிறான்,

﴿إِنَّ عِدَّةَ ٱلشُّهُورِ عِندَ ٱللَّهِ ٱثۡنَا عَشَرَ شَهۡرٗا فِي كِتَٰبِ ٱللَّهِ يَوۡمَ خَلَقَ ٱلسَّمَٰوَٰتِ وَٱلۡأَرۡضَ مِنۡهَآ أَرۡبَعَةٌ حُرُمٞۚ ذَٰلِكَ ٱلدِّينُ ٱلۡقَيِّمُۚ فَلَا تَظۡلِمُواْ فِيهِنَّ أَنفُسَكُمۡۚ وَقَٰتِلُواْ ٱلۡمُشۡرِكِينَ كَآفَّةٗ كَمَا يُقَٰتِلُونَكُمۡ كَآفَّةٗۚ وَٱعۡلَمُوٓاْ أَنَّ ٱللَّهَ مَعَ ٱلۡمُتَّقِينَ ٣٦﴾

"அல்லாஹ்விடம் நிச்சயமாக மாதங்களின் எண்ணிக்கை, வானங்கள் மற்றும் பூமியை படைத்த நாள் முதல் அல்லாஹ்வின் பதிவேட்டில் பன்னிரெண்டு மாதங்களாகும். அவற்றில் நான்கு புனிதமானவையாகும். இதுதான் நேரான மார்க்கம். இவைகளில் உங்களுக்கு நீங்களே அநியாயம் செய்து கொள்ளாதீர்கள்" (அல்குர்ஆன் 09:36).

பிரியாவிடை ஹஜ்ஜில் உரையாற்றிய போது நபி ﷺ அவர்கள் கூறினார்கள்:

عن أبي بكرة نفيع بن الحارث: إنّ الزّمانَ قَدِ اسْتَدارَ كَهَيْئَتِهِ يَومَ خَلَقَ اللّهُ السَّمَواتِ والأرْضَ، السَّنَةُ اثْنا عَشَرَ شَهْرًا، مِنها أرْبَعَةٌ حُرُمٌ، ثَلاثٌ مُتَوالِياتٌ: ذُو القَعْدَةِ، وذُو الحِجَّةِ، والمُحَرَّمُ، ورَجَبُ مُضَرَ الذي بيْنَ جُمادى، وشَعْبانَ..

"அல்லாஹ் வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் இருந்த (பழைய) நிலைக்கே காலம் திரும்பிவிட்டது. ஓர் ஆண்டு என்பது பன்னிரண்டு மாதங்கள் ஆகும். அவற்றில் நான்கு மாதங்கள் (போரிடுதல் விலக்கப்பட்ட) புனித மாதங்களாகும். (அந்த நான்கு மாதங்களில்) மூன்று மாதங்கள் தொடர்ந்து வருகின்றவையாகும்.

அவை துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம் மற்றும் ஜுமாதஸ்ஸானீக்கும் ஷஅபானுக்கும் இடையிலுள்ள முளர் குலத்து ‹ரஜப்› மாதம் ஆகும்”[1].

முஹர்ரம் மாதம் பற்றிய சில சட்டங்கள்

இவ்வாறு சிறப்பு வாய்ந்த இம்மாதத்திற்கென சில பிரத்தியேக சட்டங்கள் உள்ளன. அவை வருமாறு:

புதுவருடக் கொண்டாட்டம்

ஹிஜ்ரி நாட்காட்டியானது தொழுகை தவிர்ந்த இஸ்லாத்தின் ஏனைய வணக்க வழிபாடுகளை பிறை அடிப்படையில் அமைத்து செயற்படுவதற்காகவும், முஸ்லிம்களுக்கான தனித்துவமான, உண்மையான நாட்காட்டியாக இருக்க வேண்டுமெனவும், வரலாற்று நிகழ்வுகளை துள்ளியமாக அறிந்துகொள்வதற்காக வேண்டியும் உமர் ﵁ அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஓர் நாட்காட்டியாகும்.

இதில் அனைத்து மாதங்களும் அல்லாஹ்விடத்தில் சமமான அந்தஸ்த்தையே பெறுகின்றன. அதிலும் துல்கஃதா, துல்ஹஜ், முஹர்ரம், ரஜப் ஆகிய நான்கு மாதங்களும் விஷேட அந்தஸ்த்தைப் பெறுகின்றன.

ஹிஜ்ரி நாட்காட்டியின் முதல் மாதமாக முஹர்ரம் மாதம் இடம்பெறுவதால், வருடத்தின் முதல் மாதமாக இது கணிக்கப்படுகிறது. இத்தினத்தை புதுவருடப் பிறப்பு தினமாக கொண்டாடுவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இஸ்லாம் எமக்கு கொண்டாடுவதற்கான தினங்களாக நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள், ஜும்ஆ நாள் ஆகிய மூன்று கொண்டாட்ட தினங்களை மாத்திரமே அறிமுகப்படுத்தியுள்ளது. இவற்றைத் தவிர வேறு எந்த தினத்தையும், நிகழ்வையும் கொண்டாடுவதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

01. கொண்டாட்ட தினம் என்பதன் அர்த்தம்:

கொண்டாட்ட தினம் என்பதை இஸ்லாம் ஆண்மீக ரீதியாகவே

1 அறிவிப்பவர்: அபூபக்ரா Ó, நூல்: புஹாரி 3197, முஸ்லிம் 1679.

நோக்குகிறது. அதுவும் குறிப்பாக இத்தினங்களில் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துமாறும், அத்தினங்களில் வீண்விரயங்களைத் தவிர்க்குமாறுமே இஸ்லாம் எமக்கு வழிகாட்டுகிறது.

அந்த வகையில் நோன்புப் பெருநாள் என்பது ரமழான் மாத அனைத்து நோன்புகளையும் அல்லாஹ் கூறிய அடிப்படையில் முழுமையாக நோற்றுவிட்டு, நரகவிடுதலையையும் பெற்று விட்ட மகிழ்ச்சியில் அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றி, தக்பீருடன் அன்றைய நாளை ஆகுமான விடயங்களிலும், இஸ்லாம் குறிப்பிடும் சில வணக்க வழிபாடுகளிலுமே கழிக்க வேண்டும்.

ஹஜ்ஜுப் பெருநாள் என்பது துல்ஹஜ் மாத முதல் பத்து நாட்களில் செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ள சில வணக்கங்களைச் செய்துவிட்டு, அரஃபா நோன்பையும் நோற்று, முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நிலையில், நரக விடுதலையையும் பெற்ற மகிழ்ச்சியில் அல்லாஹ்வுக்கு நன்றிதெரிவிக்கும் முகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தினத்தில் பெருநாள் தொழுகையைத் தொழுது, அல்லாஹ்வுக்காக அறுத்துப் பலியிட்டு, தக்பீருடன் அன்றைய நாளை ஆகுமான விடயங்களிலும், இஸ்லாம் குறிப்பிடும் சில வணக்க வழிபாடுகிளிலுமே கழிக்க வேண்டும்.

வெள்ளிக்கிழமை என்பது ஜும்ஆத் தொழுகையும், திரையின்றி துஆ அங்கீகரிக்கப்படும் நேரமும் இடம்பெற்றுள்ள தினமாகும். இத்தினத்தில் ஜும்ஆத் தொழுகைக்காக செல்லும் ஒருவர் முறையே ஒட்டகம், மாடு, ஆடு போன்ற கால்நடைகளை அல்லாஹ்வுக்காக அறுத்துப் பலியிட்ட நன்மையைப் பெறுகிறார். அத்தோடு ஜும்ஆப் பிரசங்கம் ஆரம்பித்து, ஜும்ஆத் தொழுகை முடியும் வரையிலும், அஸர் தொழுகையிலிருந்து மஃரிப் தொழுகை வரையிலும் தான் விரும்பியவற்றை அல்லாஹ்விடம் திரையின்றி கேட்டுப்பெற்றுக்கொள்ளும் மகத்தான நேரத்தைப்

பெற்றுக்கொள்கிறார். எனவே இத்தினத்தையும் சிறு பெருநாள் தினமாகவே இஸ்லாம் ஆக்கியுள்ளது.

இது தவிர வேறு தினங்களை கொண்டாட்ட தினங்களாக எடுத்துக்கொள்வதோ, இஸ்லாம் கொண்டாட்டமாக ஆக்காத அத்தினங்களை இஸ்லாமிய மயப்படுத்துவதோ கூடாது. அவ்வாறு நாம் கொண்டாடும் பட்சத்தில் அதை பிறமத கலாச்சாரமாக இஸ்லாம் கருதுகிறது. அவர்களின் மதங்களின் அடிப்படையிலும், மதச்சார்பற்ற முறையிலும் பல கொண்டாட்டங்களை செய்துவருகின்றனர். அவ்வாறு நாமும் செய்வது அவர்களின் வழியில் எம்மையும் கொண்டு போய்விடும் எனவும், எம்மிடம் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிச் செல்வோரின் ஓர் பண்பு வந்துவிடும் எனவும் இஸ்லாம் எச்சரிக்கிறது. இவ்வாறு இஸ்லாம் அனுமதிக்காத பிறமதக் கலாச்சாரங்களை நாம் தொடர்ந்து செய்கையில் இஸ்லாத்தை விட்டே வெளியேறிவிடும் அபாயம் எமக்கு ஏற்படும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

عن عبد الله بن عمر: من تشبَّهَ بقومٍ فَهوَ مِنهم.

“யார் ஓர் சமூகத்துக்கு ஒப்பாகிறாரோ அவர் அவர்களைச் சார்ந்தவராகிவிடுவார்”[1].

02. புதுவருட வாழ்த்துக் கூறல்:

அவ்வாறே ஹிஜ்ரி புதுவருடத்தை முன்னிட்டு வாழ்த்துக் கூறுவதும் இஸ்லாம் தடை செய்துள்ள ஓர் செயலாகும். கொண்டாடுவதே தடுக்கப்பட்ட ஒன்றாக இருக்கும் போது, இதை முன்னிட்டு பிறருக்கு வாழ்த்துக் கூறுவதும் அக்கொண்டாட்டத்தின் ஓர் அம்சமான தடுக்கப்பட்ட செயலாகும். ஹிஜ்ரி ஆண்டு என்பது உமர் ؓ அவர்கள் காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்டது. இது அரசியல் விவகாரங்களுக்கும், ஒப்பந்தங்களின் காலக்கெடுவை அறிந்துகொள்வதற்கும், வெளிநாட்டு உறவுகளைப் பேணவும் உமர் ؓ அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன் நபி ﷺ அவர்கள்

1 அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ؓ, நூல்: அபூதாவுத் 4031, அஹ்மத் 5114.

காலத்திலும்,அபூபக்கர்ﷺஅவர்கள்காலத்திலும் முஸ்லிம்களுக்கென திகதி முறையும்,புதுவருடப்பிறப்பும்,அதற்கானகொண்டாட்டங்களும், அதற்காக வாழ்த்துக்கூறிக்கொள்ளும் முறையும் இடம்பெறவில்லை. எனவே வாழ்த்துக்கூறுதல் என்பதற்கான ஆதாரங்கள் எங்குமே இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹீப்ரு நாட்காட்டியின் முதல் மாதமான «திஷ்ரேய்» மாதத்தின் முதலாம் நாளை யூதர்கள் புதுவருட தினமாகக் கொண்டாடுகிறார்கள். சனிக்கிழமை எவ்வாறு அவர்களுக்கு முக்கிய நாளோ அவ்வாறே இத்தினத்திலும் எதையும் செய்யமாட்டார்கள். ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கூறிக்கொள்வார்கள். கிறிஸ்துவ நாட்காட்டியின் முதல் மாதமான «ஜனவரி» மாதத்தின் முதல் நாளை கிறிஸ்தவர்கள் உட்பட உலக மக்கள் அனைவரும் புதுவருட தினமாகக் கொண்டாடுகிறார்கள். இதில் பல அனாச்சாரங்களையும், களியாட்டங்களையும் உண்டுபன்னி குதூகலிக்கின்றனர். ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கூறிக்கொள்வார்கள்.

அவ்வாறே நெருப்பு வணங்கிகளாக இருந்த பாரசீகர்களின் நாட்காட்டியின் முதல் மாதமான «நவ்ரூஸ்» மாதத்தையும் அவர்கள் கொண்டாடி மகிழ்ந்துள்ளார்கள். ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கூறியுள்ளனர். இஸ்லாத்திற்கு முன் அரேபியர்களும் «முஹர்ரம்» மாத முதல் தினத்தில் தமது அரசர்களையும், எஜமான்களையும் வாழ்த்துவார்கள்.

இதுபோன்று உலகின் பல்வேறு நாடுகளில் பல்வேறு மத, கலாச்சார அடிப்படையில் புதுவருடக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறன. இலங்கையில் பழங்காலத் தமிழர்களின் வழியாக தோற்றம் பெற்ற தமிழர் புத்தாண்டு முறையை பௌத்தர்களும் கொண்டாடுகின்றனர். இப்புத்தாண்டை «சித்திரைப் புத்தாண்டு» என தமிழர்களும், «வெசாக் புத்தாண்டு» என பௌத்தர்களும் கொண்டாடி வருகின்றனர். இப்புத்தாண்டுகளின் போது வாழ்த்துக்கூறுவது மிக முக்கிய பங்கை வகிக்கிறது.

எனவே புத்தாண்டுக்காக வாழ்த்துக்கூற வேண்டுமென்றோ,

இவ்வாறான வாழ்த்து முறைகள் நபி ﷺ அவர்கள், அபூபக்கர் ؓ அவர்கள் காலங்களிலோ, இஸ்லாமிய நாட்காட்டியை உருவாக்கிய உமர் ؓ அவர்கள் காலத்திலோ, அதற்கு அடுத்து வந்த கலீபாக்களின் காலங்களிலோ இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் ஹதீஸ்களில் காணப்படவில்லை. எனவே நாம் தவிர்ந்திருப்பதே மிகவும் சிறந்ததாகும்.

பிற மத சகோதரர்களுடன் நட்புறவில் இருக்கும் பலருக்கு வாழ்த்துச் செய்திகள் வரலாம். அல்லது முஸ்லிம் சகோதர சகோதரிகளிடமிருந்தும் வாழ்த்துச் செய்திகள் வரலாம். அவ்வாறு பிறர் எமக்கு வாழத்துக்கூறினால், 'உங்களுக்கும் அப்படியே உண்டாகட்டும்' என மறு வாழ்த்து கூறுவதில் தவறில்லை எனவும், ஆனால் நாமாக ஆரம்பித்து இது போன்ற வாழ்த்துக்களைக் கூறுவது தடுக்கப்பட்ட ஒன்று எனவும் அஷ்ஷேக் ஸாலிஹ் அல் உஸைமீன் ؒ அவர்கள் குறிப்பிடுகின்றார்[1].

03. வாழ்த்துதல் என்பதன் அர்த்தம்:

வாழ்த்துதல் எனும் சொல்லுக்கு ஆசி வழங்குதல், அருள் புரிதல் என அர்த்தங்கள் உள்ளன. நடைமுறையை பார்க்கும் போது பெரியவர்கள், சிறியவர்களை வாழ்த்துவதும், வசதிபடைத்தவர்கள், வசதியில் தம்மை விடக் குறைவானவரை வாழ்த்துவதும், ஆசிரியர்கள் மாணவர்களை வாழ்த்துவதும், பெற்றோர்கள் பிள்ளைகளை வாழ்த்துவதும், ஜனாபதி நாட்டு மக்களை வாழ்த்துவதும் நடைமுறையில் உள்ள ஒன்றாகும். அதிலும் குறிப்பாக பிறருக்காக பிரார்த்திக்கும் போதே இவ்வாறான வாழ்த்துக்கள் கூறப்படுகின்றன.

பொதுப்படையான வாழ்த்துக்கூறுவதில் இஸ்லாமிய ரீதியாக எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால் "நான் உன்னை வாழ்த்துகிறேன்" எனும் வாசகம் பயன்படுத்தப்படும் போதே பிரச்சினை எழுகிறது. இந்த வார்த்தையைக் கூறி வாழ்த்தும் ஒருவர் எதற்காக வாழ்த்துகிறாரோ அது தன்னிடம் நிரம்பியுள்ளது

1 சவூதி அரேபியாவின் உனைஸா இஸ்லாமிய அழைப்பு மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கேள்விபதில் நிகழ்வில் கூறிய பதில், சீடீ இலக்கம் 835.

எனவும், அது உங்களுக்கும் நான் கிடைக்கச் செய்கிறேன் எனும் எண்ணத்திலுமே வாழ்த்துகிறார்.

இஸ்லாத்தைப் பொறுவத்தவரை அல்லாஹ்வை முழுமையாக நம்பிக்கை கொள்வது முஸ்லிம்கள் ஒவ்வொருக்கும் கடமையாகும். அல்லாஹ்வே அனைத்தையும் படைத்தவன், விரும்பியோருக்கு வழங்குபவன், விரும்பியோருக்கு தடுப்பவன், நலவும், கெடுதியும் அவன் புரத்திலிருந்தே ஏற்படுகிறது, ஆசியும், அருளும் அவனிடமிருந்து மட்டுமே கிடைக்கும் என அல்லாஹ் விடயத்தில் தனது நம்பிக்கையை ஒருமைப்படுத்த வேண்டும். வேறு யாரும் எதையும் செய்வதற்கு சக்தி பெற மாட்டார்கள் என நம்பிக்கை கொள்ள வேண்டும்.

வாழ்த்துக்கூறும் போது, அதாவது ஆசி வழங்கும் போது அல்லாஹ்வுக்கு மட்டுமே முடியுமான ஒரு பண்பு தன்னிடமும் இருப்பதாகவே ஒருவர் ஆசி வழங்குகிறார். இந்த இடத்தில் மனிதன் அல்லாஹ்வின் பண்பைப் பெற்று அல்லாஹ்வுக்கு இணையானவனாக தன்னை மாற்றிக்கொள்கிறான். அல்லாஹ்வுக்கு இணையாக எவரும் இல்லை எனும் போதும், ஆசி வழங்கும் சக்தி அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் இருக்க முடியாது எனும் போதும் எப்படி முஸ்லிமான ஒருவர் வாழ்த்துக்கூற முடியும்?!

எனவே கடவுள் நம்பிக்கையற்ற, அல்லது அனைத்தும் கடவுள் எனும் கோட்பாட்டை நம்புகிற ஒருவரே இவ்வாறு வாழ்த்துக்கூற முடியுமே தவிர அல்லாஹ்வை இணையற்ற இறைவனாக ஏற்ற எவரும் வாழ்த்துக்கூறமாட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மீறி வாழ்த்து கூறும் போது நாம் அல்லாஹ்வுக்கு இணைவைத்தவர்களாக மாறிவிடுகிறோம்.

அல்லாஹ் கூறுகிறான்,

﴿ٱلْحَمْدُ لِلَّهِ رَبِّ ٱلْعَٰلَمِينَ ۝٢ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ ۝٣﴾

“எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே. (அவன்) அகிலத்தைப் (படைத்துப்) பராமரிப்பவன். அளவற்ற அருளாளன். நிகரற்ற

அன்புடையோன்." (அல்குர்ஆன் 03-01:02).

﴿لَيْسَ كَمِثْلِهِۦ شَيْءٌۖ وَهُوَ ٱلسَّمِيعُ ٱلْبَصِيرُ ١١﴾

"அவனைப் போல் எதுவும் இல்லை. அவன் செவியுறுபவன்; பார்ப்பவன்." (அல்குர்ஆன் 42:11).

﴿وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدٌۢ ٤﴾

"அவனுக்கு நிகராக யாருமில்லை." (அல்குர்ஆன் 112:04).

எனவே வாழ்த்துக்கூறுவது பிற மதக் கலாச்சாரம் என்பது தெளிவாகிறது. இதனை நாமும் செய்து இணைவைப்பில் விழாமல் நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அப்படியும் வாழ்த்துக்கூற வேண்டியேற்பட்டால் அல்லாஹ்வை முன்னிலைப்படுத்தி, துஆவாக தனது வாழ்த்தை ஆக்கிக்கொள்ளட்டும்.

04. பழையன கழிந்து புதியன புகுதல்

அவ்வாறே சிலர் புதுவருடம் பிறந்துவிட்டால் வணக்க வழிபாடுகள் ரீதியிலும், பண்பு ரீதியிலும், தொழிற்துறை சார்ந்த, கல்வித்துறை சார்ந்த அனைத்து விடயங்களிலும் பழையன கழிந்து புதியன சிறந்த முறையில் புக வேண்டுமென நினைத்து, பிரத்தியேக கொண்டாட்டங்களிலும், வணக்க வழிபாடுகளிலும் ஈடுபடுகின்றனர். பழைய பொருட்களை நீக்கிவிட்டு, புதுப் பொருட்களை வாங்குகின்றனர். பழைய சிந்தனைகளை உதரித்தள்ளிவிட்டு, புதிய சிந்தனையில் பயணிக்க வேண்டுமென முயல்கின்றனர். நாகரிகம் வளர வளர, மக்களிடையே புதுப் பொருட்களும், புதிய பழக்க வழக்கங்களும் நடைமுறைக்கு வருதல் என்பது தவிர்க்க முடியாதது தான். ஆனால் அதற்காக குறிப்பிட்ட நாளை நியமித்து, சடங்காக அதை செய்வது மூடநம்பிக்கையின் உச்சம் என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

இஸ்லாத்தைப் பொருத்தவரையில் இதுவும் ஆரோக்கியமான செயற்பாடு கிடையாது. சென்ற தவறுகளைத் திருத்தி, புதுப்

பாதையை அமைத்துக்கொள்வது புதுவருடத்தில் மாத்திரம் கிடையாது. அது ஒவ்வொரு நொடியிலும் இடம்பெற வேண்டும் என்பதையே இஸ்லாம் கட்டாயப்படுத்தியுள்ளது. ஏனெனில் எமது அடுத்த நொடிக்கான வாழ்வின் நிலை உறுதியற்றது. அதனாலே இருக்கும் நொடிகளை, நிமிடங்களை, காலத்தை சிறந்த முறையில் நற்செயல்களுக்காக பயன்படுத்துமாறு இஸ்லாம் கூறுகிறது.

அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄ அறிவித்தார்கள்,

عن عبد الله بن عمر: أخَذَ رَسولُ اللَّهِ ﷺ بمَنْكِبِي، فقالَ: كُنْ في الدُّنْيا كَأنَّكَ غَرِيبٌ أوْ عابِرُ سَبِيلٍ. وكانَ ابنُ عُمَرَ يقولُ: إذا أمْسَيْتَ فلا تَنْتَظِرِ الصَّباحَ، وإذا أصْبَحْتَ فلا تَنْتَظِرِ المَساءَ، وخُذْ مِن صِحَّتِكَ لِمَرَضِكَ، ومِنْ حَياتِكَ لِمَوْتِكَ.

“இறைத்தூதர் ﷺ அவர்கள் என் தோளைப் பிடித்துக் கொண்டு ‹உலகத்தில் நீ அந்நியனைப் போன்று, அல்லது வழிப் போக்கனைப் போன்று இரு› என்றார்கள். இப்னு உமர் ﵄ அவர்கள் தொடர்ந்தும் கூறுகையில், ‹நீ மாலை நேரத்தை அடைந்தால் காலைவேளையை எதிர்பார்க்காதே! நீ காலை வேளையை அடைந்தால் மாலை நேரத்தை எதிர்பார்க்காதே! நீ நோய்வாய்ப்படும் நாளுக்காக உன்னுடைய ஆரோக்கியத்தில் சிறி(து நேரத்)தைச் செலவிடு. உன்னுடைய இறப்பு(க் குப் பிந்திய நாளு)க்காக உன்னுடைய வாழ்நாளில் சிறி(து நேரத்)தைச் செலவிடு› என்றார்கள்.”[1].

சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல்

அல்லாஹ்வால் கண்ணியப்படுத்தப்பட்ட நான்கு மாதங்களிலும் சண்டை சச்சரவுகளிலும், போர்களிலும் ஈடுபடக்கூடாது என்பது இப்றாஹிம் ﵇, இஸ்லமாஈல் ﵇ ஆகியோர் காலத்திலிருந்து பின்பற்றப்பட்டு வரும் ஓர் இறைச்சட்டமாகும். இதையே அரேபியர்களும் நபியவர்களின் வருகைக்கு முற்பட்ட காலத்திலும் பின்பற்றி வந்தனர். இம்மாதங்களில் அவர்கள் சண்டை சச்சரவுகளிலும், போர்களிலும் ஈடுபடாமல் இருந்ததற்கான காரணத்தை பின்வருமாறு நோக்கலாம்

1 அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் ﵄, நூல்: புஹாரி 6416, திர்மிதி 2333, இப்னுமாஜா 4114

பொதுவாக பழங்காலத்து அரேபியர்கள் துல்கஃதா மாதத்தில் போர் செய்வதை நிறுத்திக் கொள்வார்கள். இதனாலே இதற்கு “துல்கஃதா” (போர்செய்வதை நிறுத்தும் மாதம்) என பெயர் சூட்டப்பட்டது. அதன் பின் “துல்ஹஜ் மாதம்” (ஹஜ்செய்யும் காலம்) வருவதால் அக்காலத்தில் ஹஜ் கிரியைகளில் மூழ்கி விடுவார்கள். முஹர்ரம் மாதத்தை ஹஜ் செய்ய வந்தவர்கள் தமது பிரதேசங்களுக்கு திரும்பிச் செல்லும் காலமாக கணித்திருந்தார்கள். இதனால் இம் மூன்று மாதங்களிலும் அவர்கள் தொடராகவே யுத்தங்கள் செய்வதை நிறுத்தி வைத்திருந்தனர். ரஜப் மாதத்தை அரேபிய தீபகற்பத்தின் தென்பகுதி மக்களுக்கான உம்ராவுக்கான மாதமாக அவர்கள் கணித்து வைத்திருந்தனர். அம்மாதத்தில் உம்ரா கிரியைகள் நடைபெறுவதாலும், யாத்திரிகர்களின் போக்குவரத்துகள் இருப்பதாலும் அதிலும் யுத்தம் செய்வதை நிறுத்தியிருந்தனர். இதுவே அரேபியர்கள் இம்மாதங்களில் யுத்தம் செய்யமால் இருந்தமைக்கான காரணங்களாகும்.

தற்காப்புக்காகத் தவிர சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதும், வன்முறைகளில் இறங்குவதும், போர் செய்வதும் எல்லாக் காலங்களிலும் தடுக்கப்பட்ட ஒரு பாவச் செயலாகும். ஆயினும் இம்மாதங்களில், குறிப்பாக முஹர்ரம் மாதத்தில் இவற்றில் ஈடுபடுவது எமக்கு அதிகமான பாவச்சுமைகளைப் பெற்றுத் தரும். குடும்ப சண்டைகள், ஊர் சண்டைகள், அரசியல் சண்டைகள் போன்றவற்றில் ஈடுபட்டு இம் மாதத்தின் புனிதத் தன்மையைப் பாழாக்கி, ஏனைய மாதங்களை விடவும் இம் மாதத்தில் கூடுதல் பாவச்சுமையை சுமப்பதை விட்டும் தவிர்ந்திருக்க வேண்டும். ரமழான் மாதத்திலும், ஹஜ்ஜின் போதும் பிறருக்கு அநியாயம் செய்வது எவ்வாறு அதிகபட்ச பாவத்தைப் பெற்றுத் தருமோ அவ்வாறே முஹர்ரம் மாதமும் பெற்றுத்தரும். அல்லாஹ் கூறுகிறான்,

﴿فَلَا تَظۡلِمُواْ فِيهِنَّ أَنفُسَكُمۡۚ ٣٦﴾

“இவைகளில் (இப் புனித மாதங்களில்) உங்களுக்கு நீங்களே அநியாயம் செய்து கொள்ளாதீர்கள்” (அல்குர்ஆன் 09:36).

நோன்பு நோற்றல்

முஹர்ரம் மாதத்தில் அதிக நாட்கள் நோன்பிருப்பது பற்றி இஸ்லாமிய அறிஞர்களுக்கு மத்தியில் இரு கருத்துகள் காணப்படுகின்றன.

அ. சில இஸ்லாமிய அறிஞர்கள் முஹர்ரம் மாதம் முழுவதும் நோன்பிருக்க முடியும் எனக் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸைக் கூறுகின்றனர்,

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

عن أبي هريرة ش: أفضلُ الصِّيامِ بعدَ شَهرِ رمضانَ. شَهرُ اللَّهَ المحرَّمُ.

“ரமழான் மாதத்திற்குப் பின் நோன்பு நோற்பதற்குச் சிறந்த மாதம் அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாதமாகும்”[1].

ஆ. மேற்கூறப்பட்ட ஹதீஸ் நோன்பிருக்குமாறு ஆசையூட்டுகிறது எனவும், ரமழானிற்கு அடுத்ததாக அதிக நோன்பு நோற்பதற்கு தகுதியான மாதம் ஷஅபான் எனவும், முஹர்ரம் மாதத்தில் ஷஅபானை விடவும் குறைந்த நாட்கள் நோன்பிருந்தால் போதுமானது எனவும் மேலும் சில இஸ்லாமிய அறிஞர்கள் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக பின்வரும் ஆஇஷா ؓ அவர்களின் ஹதீஸைக் கூறுகின்றனர்,

عَنْ عائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْها قالَتْ: كانَ رَسولُ اللَّهِ ﷺ يَصُومُ حتّى نَقُولَ: لا يُفْطِرُ، ويُفْطِرُ حتّى نَقُولَ: لا يَصُومُ، فَما رَأَيْتُ رَسولَ اللَّهِ ﷺ اسْتَكْمَلَ صِيامَ شَهْرٍ إلّا رَمَضانَ، وما رَأَيْتُهُ أكْثَرَ صِيامًا منه في شَعْبانَ.

“(இனி) நோன்பை விடவே மாட்டார்கள்› என்று நாங்கள் கூறுமளவுக்கு நபி ﷺ அவர்கள் நோன்பு நோற்பார்கள்: ‹(இனி) நோன்பு நோற்கவே மாட்டார்கள்› என்று நாங்கள் கூறுமளவுக்கு நோன்பைவிட்டுவிடுவார்கள்! ரமழானைத் தவிர வேறெந்த மாதத்திலும் முழு மாதமும் நபி ﷺ அவர்கள் நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை; ஷஅபான் மாதத்தில் தவிர (வேறெந்த மாதத்திலும்)

1 அறிவிப்பவர்: அபூஹுரைரா Ô, நூல்: முஸ்லிம் 1163, அபூதாவுத் 2429.

அதிகமாக அவர்கள் நோன்பு நோற்றதை நான் பார்த்ததில்லை"[1].

முதலாவது கூறப்பட்ட ஹதீஸில் ரமழானுக்குப் பின் நோன்பிருப்பதற்கு சிறந்த மாதம் முஹர்ரம் எனக் கூறப்பட்டுள்ளது. இரண்டாவது ஹதீஸில் ரமழானுக்கு அடுத்து, ஷஅபான் மாதத்திலே நபியவர்கள் அதிக நோன்பு நோற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இவை இரண்டும் பார்ப்பதற்கு முரணாக இருந்தாலும் இதற்கான தெளிவை இமாம் ஷம்ஷுல் ஹக் ஆபாதி ﵀ அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்,

"இதற்கான தீர்வை இரு விதமாக நோக்க முடியும்:

முதலாவது: முஹர்ரம் மாதத்தின் சிறப்பை நபியவர்கள் தமது வாழ்வின் இறுதிப் பகுதியில் அறிந்திருக்கலாம்.

இரண்டாவது: முஹர்ரம் மாதத்தில் அவர்கள் அதிக பிரயாணம் அல்லது நோய் போன்ற காரணங்களுக்கு ஆளாகியிருக்கலாம்"[2].

மேற்படி கருத்துக்கமைய ஷஃபான் உட்பட முஹர்ரம் மாதத்திலும் தாம் விரும்பியவாறு நோன்பு நோற்று அதிக நன்மைகளை ஈட்ட முடியும் என்பது தெளிவாகிறது. இது தான் ஏற்றமான கருத்துமாகும்.

பத்தாம் நாள் நோன்பு

ஆஷூரா தினம் என்பது குறிப்பாக முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாளைக் குறிக்க பயன்படுத்தப்படும் அரபு வாசகமாகும். இத்தினத்தில் நோன்பிருப்பதை தனியாகக் குறிப்பிட்டு பல ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. நபி ﷺ அவர்கள் இத்தினத்தில் நோன்பிருக்குமாறு எமக்கு ஆர்வமூட்டியுள்ளார்கள்.

01. ஆஷூரா நாளின் சிறப்பு

மூஸா ﵇ அவர்களின் காலத்தில் முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் அல்லாஹ் அவரையும், அவரது சமூகத்தவர்களான யூதர்களையும் பிர்அவ்ன் எனும் அவரின் எதிரியிடமிருந்து பாதுகாத்தான். அதற்கு

1 அறிவிப்பவர்: ஆஇஷா ﵂, நூல்: புஹாரி 1969, முஸ்லிம் 1156.
2 பார்க்க: அவ்னுல் மஃபூத் 07/59.

நன்றி தெரிவிக்கும் முகமாக மூஸா عليه السلام அவர்கள் இத்தினத்தில் நோன்பிருந்துள்ளார்கள். அதை கருத்தில் கொண்டே நபி ﷺ அவர்களும் நோன்பிருந்துள்ளார்கள்.

இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்கள் கூறினார்கள்,

عن عبد الله بن عباس: لَمّا قَدِمَ النبيُّ ﷺ المَدِينَةَ وجَدَ اليَهُودَ يَصُومُونَ عاشُوراءَ، فَسُئِلُوا عن ذلكَ، فَقالوا: هذا اليَوْمُ الذي أظْفَرَ اللَّهُ فيه مُوسى، وبَنِي إسْرائِيلَ على فِرْعَوْنَ، ونَحْنُ نَصُومُهُ تَعْظِيمًا له، فَقالَ رَسولُ اللَّهِ ﷺ: نَحْنُ أوْلى بمُوسى مِنكُم، ثُمَّ أمَرَ بصَوْمِهِ.

“நபி ﷺ அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்தபோது யூதர்கள் (முஹர்ரம் -10ஆம் நாளான) ஆஷூரா தினத்தன்று நோன்பு நோற்பதைக் கண்டார்கள். யூதர்களிடம் அதுபற்றிக் கேட்கப்பட்டபோது அவர்கள், ‹இந்த நாள் தான் ஃபிர்அவ்னுக்கெதிராக மூஸா عليه السلام அவர்களுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் அல்லாஹ் வெற்றியளித்த நாள். எனவே, நாங்கள் மூஸா عليه السلام அவர்களைக் கண்ணியப்படுத்தும் விதத்தில் அதில் நோன்பு நோற்கிறோம்› என்று கூறினார்கள். அப்போது இறைத்தூதர் ﷺ அவர்கள், ‹மூஸா عليه السلام அவர்களைக் கண்ணியப்படுத்திட நாங்களே அதிக உரிமையுடையவர்கள்› என்று சொல்லிவிட்டு அந்நாளில் (தாமும் நோன்பு நோற்று) நோன்பு நோற்கும்படி (முஸ்லிம்களுக்கு) உத்தரவிட்டார்கள்”[1].

நபி ﷺ அவர்கள் நோற்ற ஆஷூரா நோன்பு நான்கு படித்தரங்களில் அமைந்து காணப்பட்டது:

முதல் படித்தரம்: இந் நோன்பை நபியவர்கள் மக்காவில் நோற்றுள்ளார்கள். ஆனால் அங்குள்ளவர்களுக்கு இதனை நோற்குமாறு கட்டளையிடவில்லை.

عن عائشة أم المؤمنين: كانَ يَوْمُ عاشُوراءَ تَصُومُهُ قُرَيْشٌ في الجاهِلِيَّةِ، وكانَ النبيُّ ﷺ يَصُومُهُ فَلَمّا قَدِمَ المَدِينَةَ صامَهُ وأَمَرَ بصِيامِهِ، فَلَمّا نَزَلَ رَمَضانُ كانَ رَمَضانُ الفَرِيضَةَ، وتُرِكَ عاشُوراءُ، فَكانَ مَن شاءَ صامَهُ ومَن شاءَ لَمْ يَصُمْهُ..

“அறியாமைக் காலத்தில் குறைஷியர் நோன்பு நோற்கும் நாளாக

1 அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் رضي الله عنه, நூல்: புஹாரி 3943, 4737, முஸ்லிம் 1130.

ஆஷூரா (முஹர்ரம் பத்தாம்) நாள் இருந்து வந்தது. நபி ﷺ அவர்களும் அந்நாளில் நோன்பு நோற்று வந்தார்கள். (ஹிஜ்ரத் செய்து) மதீனா நகருக்கு அவர்கள் வந்தபோது அந்நாளில் தாமும் நோன்பு நோற்று, (மற்றவர்களும்) நோன்பு நோற்கும்படி பணித்தார்கள். பிறகு ரமழான் (நோன்பு) கடமையானபோது ரமழான் (மாத நோன்பு) கடமையான வணக்கமாகவும், ஆஷூரா நோன்பு கைவிடப்பட்டு, அன்று விரும்பியவர் நோன்பு நோற்கலாம்; விரும்பியவர் நோன்பு நோற்காமலுமிருக்கலாம் என்று (கூடுதல் வணக்கமாகவும்) ஆகிவிட்டது"[1].

இரண்டாம் படித்தரம்: நபி ﷺ அவர்கள் மதீனாவிற்கு வந்த பின், யூதர்களும் அத்தினத்தில் நோன்பு நோற்பதையும், அத்தினத்தை கண்ணியப்படுத்துவதையும் கண்டு, தானும் நோன்பு நோற்று, ஏனைய முஸ்லிம்களையும் நோன்பு நோற்குமாறு கட்டளையிட்டார்கள். மதீனாவில் இருந்த முஸ்லிம்கள் தமது பிள்ளைகளையும் இந் நோன்பை பிடிக்கச்செய்யும் அளவுக்கு நபி ﷺ அவர்கள் இதன் மகத்துவத்தை அவர்களுக்கு வழியுருத்தியிருந்தார்கள்.

மூன்றாம் படித்தரம்: ரமழான் மாத நோன்பு கடமையாக்கப்பட்ட பின், தான் ஆஷூரா நோன்பு நோற்பதை விட்டுவிட்டு, தன் தோழர்களுக்கு அந் நோன்பை நோற்குமாறு கட்டளையிட்டார்கள். நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

عن عبد الله بن عمر: أنّ أهْلَ الجاهِلِيَّةِ كانُوا يَصُومُونَ يَومَ عاشُوراءَ، وأنّ رَسولَ اللّهَ ﷺ صامَهُ، والمُسْلِمُونَ قَبْلَ أنْ يُفْتَرَضَ رَمَضانُ، فَلَمّا افْتُرِضَ رَمَضانُ، قالَ رَسولَ اللّهَ ﷺ: إنّ عاشُوراءَ يَوْمٌ مِن أيّامِ اللّهِ، فمَن شاءَ صامَهُ ومَن شاءَ تَرَكَهُ..

"அறியாமைக் கால மக்கள் (குறைஷியர்) முஹர்ரம் பத்தாவது நாள் (ஆஷூரா) அன்று நோன்பு நோற்றுவந்தனர். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும் முஸ்லிம்களும் ரமளான் நோன்பு கடமையாக்கப்படுவதற்கு முன்புவரை முஹர்ரம் பத்தாவது நாளில் நோன்பு நோற்றனர். ரமளான் நோன்பு கடமையாக்கப்பட்டதும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள், «முஹர்ரம் பத்தாவது நாள்

1 அறிவிப்பவர்: ஆஇஷா ؓ, நூல்: புஹாரி 4504, முஸ்லிம் 1125.

அல்லாஹ்வின் நாட்களில் ஒரு நாளாகும். நாடியவர் அந்நாளில் நோன்பு நோற்கலாம்; நாடியவர் அ(ந்நாளில் நோன்பு நோற்ப)தை விட்டுவிடலாம்» என்றார்கள்”[1].

நான்காம் படித்தரம்: நபி ﷺ அவர்கள் தன் வாழ்நாளின் கடைசிப்பகுதியில் முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் நோன்பை தனியாக நோற்காமல் அதற்கு முந்தைய ஒன்பதாம் நாளையும் சேர்த்து நோற்க வேண்டுமென ஆசைப்பட்டார்கள். அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் رضي الله عنه அவர்கள் கூறினார்கள்,

عبدالله بن عباس: حِينَ صامَ رَسولُ اللَّهِ ﷺ يَومَ عاشُوراءَ وأَمَرَ بصِيامِهِ قالوا: يا رَسولَ اللَّهِ، إنَّه يَوْمٌ تُعَظِّمُهُ اليَهُودُ والنَّصارى، فَقالَ رَسولُ اللَّهِ ﷺ: فإذا كانَ العامُ المُقْبِلُ -إنْ شاءَ اللَّهُ- صُمْنا اليومَ التّاسِعَ، قالَ: فَلَمْ يَأْتِ العامُ المُقْبِلُ حتّى تُوُفِّيَ رَسولُ اللَّهِ ﷺ.

“நபி ﷺ அவர்கள் (முஹர்ரம் மாத பத்தாம்) ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்று, மக்களுக்கும் அந்நோன்பை நோற்குமாறு ஏவியபோது, ‘அல்லாஹ்வின் தூதரே! இத்தினத்தை யூதர்களும், கிறிஸ்தவர்களும் கண்ணியப்படுத்துகின்றனரே!’ எனக் கூறினார்கள். அதற்கு நபி ﷺ அவர்கள், “அல்லாஹ் நாடினால் அடுத்த வருடம் முஹர்ரம் மாத ஒன்பதாம் நாளிலும் நாம் நோன்பிருப்போம்” எனக் கூறினார்கள். அடுத்த வருடம் வருவதற்குள் நபி ﷺ அவர்கள் மரணித்துவிட்டார்கள்”[2].

02. ஆஷூரா நோன்பின் சிறப்பு.

முஹர்ரம் மாதம் பத்தாம் நாளில் நோன்பிருப்பது அதற்கு முன்னுள்ள வருடத்தில் செய்த அனைத்து சிறிய பாவங்களையும் மன்னித்து விடும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

عن أبي قتادة: صيامُ يومِ عاشوراءَ، إنِّي أحتَسِبُ على اللهِ أن يُكَفِّرَ السَّنةَ الَّتي قبلَهُ.

“(முஹர்ரம் மாதம் பத்தாம் நாள்) ஆஷூரா நோன்பானது அதற்கு முன்னுள்ள வருடத்தின் (அனைத்து சிறிய) பாவங்களுக்கான பரிகாரமாக ஆகவேண்டுமென நான் அல்லாஹ்வின் மீது

1 அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு உமர் رضي الله عنه, நூல்: முஸ்லிம் 1126.
2 அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் رضي الله عنه, நூல்: முஸ்லிம் 1134, அபூதாவுத் 2445.

நல்லெண்ணம் வைக்கிறேன்"[1]. இச்சிறப்பு பத்தாம் நாள் நோன்பிருப்பவருக்கு நிச்சயம் கிடைத்திடும். அதோடு முஹர்ரம் ஒன்பதாம் நாள் நோன்பையும் சேர்த்து நோற்பவருக்கு சற்று அதிக கூலி கிடைக்கும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

عبدالله بن عباس: فَقالَ رَسولُ اللَّهِ ﷺ: فَإذا كانَ العامُ المُقْبِلُ -إنْ شاءَ اللَّهُ- صُمْنا اليومَ التّاسِعَ.

"அடுத்த வருடம் நான் இருந்தால் நிச்சயம் முஹர்ரம் மாத ஒன்பதாம் நாளிலும்நோன்பிருப்பேன்"[2].

03. ஆஷூரா தினமும், நூத அனுஷ்டானங்களும்.

முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் வந்துவிட்டால் வழமை போன்று இஸ்லாம் அனுமதிக்காத, காட்டித்தராத பல செயற்பாடுகள் மக்களால் அரங்கேற்றப்படுகின்றன. அதன் மூலம் மாத்திரமே அவர்கள் இத்தினத்தை கண்ணியப்படுத்த நினைக்கின்றனர். இந்நாளை ஓர் கொண்டாட்ட தினமாக மாற்றுவது யூதர்களும், ஷீஆக்களும் மாத்திரமே. அவர்கள் வழியில் சென்று நாம் எமது இஸ்லாமிய கொள்கையில் கலங்கத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

முஹர்ரம் மாதம் பத்தாம் நாளில் அலி ﷺ அவர்களின் மகன் ஹுஸைன் ﷺ அவர்கள் கர்பலாவில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்கள். இத்தினத்தை ஓர் துக்க தினமாக ஆக்கி, அதில் பல அனாச்சாரங்களை உருவாக்கி, அவற்றை ஷீஆக்களும், அஹ்லுல் பைத் எனக் கூறிக்கொள்வோரும் அனுஷ்டித்து வருகின்றனர்.

முஹர்ரம் மாத முதலாம் நாளில் வீட்டைப் பெருக்கி, கழுவி, சுத்தம் செய்கின்றனர். பின் சூரதுல் பாதிஹா, சூரதுல் பகராவின் முந்தைய சில பகுதிகள், சூரதுல் காஃபிரூன், சூரதுல் இஹ்லாஸ், சூரதுல் ஃபலக், சூரதுன் நாஸ் போன்ற சூராக்களை ஓதி, நபி ﷺ அவர்கள்

---

1 அறிவிப்பவர்: அபூகதாதா ﷺ, நூல்: முஸ்லிம் 1126, அபூதாவுத் 2425, திர்மிதி 749, 752, இப்னுமாஜா 1730, 1738.

2 அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரழி), நூல்: முஸ்லிம் 1134, இப்னுமாஜா 1421.

மீது பல ஸலவாத்துக்களைக் கூறி, விருந்தோம்பல் செய்து, அவை அனைத்தின் கூலிகளையும் இறந்தவர்களுக்கு அனுப்புகின்றனர்.

இம்மாதத்தில் பெண்கள் தம்மை அலங்காரம் செய்து கொள்ளமாட்டார்கள். மக்கள் இறைச்சி சாப்பிடமாட்டார்கள். விருந்துகளுக்கு அழைக்கப்பட்டால் செல்லமாட்டார்கள். திருமணங்கள் செய்து கொள்ளமாட்டார்கள். திருமணம் முடித்து இரண்டு மாதங்கள் கடக்காத கணவன் மனைவியை சேரவிடாமல் பிரித்துவிடுவார்கள். முகங்களிலும், நெஞ்சுகளிலும் அடித்துக்கொண்டு, அணிந்த ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, ஒப்பாரி வைப்பார்கள். அபூபக்கர் ﵁, உமர் ﵁, உஸ்மான் ﵁, முஆவியா ﵁, யஸீத் ﵁ போன்ற ஸஹாபாக்களை வசைபாடித் திட்டுவார்கள்.

முஹர்ரம் மாத முதல் பத்து நாட்களில் நெருப்பு மூட்டி ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வார்கள். பெரியவர்களும் சிறியவர்களும் 'யா ஹுஸைன், யா ஹுஸைன்' என முழக்கமிட்டுக்கொண்டு பாதைகளில் நடைபவனி செல்வார்கள். தமது மேனிகளையும், ஏனையோரின் மேனிகளையும் கத்தியால் வெட்டி காயப்படுத்திக் கொள்வார்கள். இம் மாதத்தில் பிறக்கும் குழந்தைகளை தீய சகுணமாக கருதுவார்கள். பச்சைக் கொடிகளைக் கட்டி இசைக் கச்சேரிகள் அமைத்து, ஆட்டம் போடுவார்கள். பாடை போன்ற ஒன்றை செய்து ஆண், பெண், சிறுவர்கள் என அனைவரும் பரகத் வேண்டியும், தீராத நோய்கள் குணமாக வேண்டுமெனவும், ஆயுள் நீடிக்க வேண்டுமெனவும் அதைத் தாண்டுவார்கள்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்,

عن عبد الله بن مسعود: ليسَ مِنّا مَن لَطَمَ الخُدُودَ، وشَقَّ الجُيُوبَ، ودَعا بدَعْوى الجاهِلِيَّةِ..

"துன்பத்தினால் தன்னுடைய கன்னத்தில் அறைந்து கொள்பவனும் ஆடையைக் கிழித்துக் கொள்பவனும் அறியாமைக் காலத்துச் சொற்களைப் பயன்படுத்துபவனும் நம்மைச் சார்ந்தவன்

அல்லன்"[1].

عن أبي موسى الأشعري: وجِعَ أبو مُوسى وجَعًا فَغُشِيَ عليه، ورَأْسُهُ في حِجْرِ امْرَأَةٍ مِن أهْلِهِ فَصاحَتِ امْرَأَةٌ مِن أهْلِهِ، فَلَمْ يَسْتَطِعْ أنْ يَرُدَّ عليها شيئًا، فَلَمّا أفاقَ قالَ: أنا بَرِيءٌ ممّا بَرِئَ منه رَسولُ اللهِ ﷺ، فإنّ رَسولَ اللهِ ﷺ بَرِئَ مِنَ الصّالِقَةِ، والحالِقَةِ، والشّاقَّةِ..

(என் தந்தை) அபூமூசா ؓ அவர்கள் தமது கடுமையான நோயால் மயக்க மடைந்துவிட்டார்கள். அவர்களின் தலை அன்னாருடைய மனைவியின் மடியில் இருந்தது. அவரின் மனைவி சப்தமிட்டுக்கொண்டிருந்தார். (தம் மனைவியின் எந்தப் பேச்சுக்கும்) அவரால் பதில் சொல்ல முடியவில்லை. பின்பு மயக்கம் தெளிந்தபோது, "நபி ﷺ அவர்கள், (துன்பத்தின்போது) அதிகமாகச் சப்தமிட்டு அழும் பெண்ணை விட்டும் மொட்டையடித்துக் கொள்ளும் பெண்ணைவிட்டும் ஆடைகளைக் கிழித் துக்கொள்ளும் பெண்ணைவிட்டும் தமது பொறுப்பை விலக்கிக் கொள்வதாக அறிவித்தார்கள். எவரிடமிருந்து நபி ﷺ அவர்கள் தமது பொறுப்பை விலக்கிக் கொண்டார்களோ அவரிடமிருந்து நானும் பொறுப்பை விலக்கிக்கொள்கிறேன்" என்று கூறினார்கள்."[2].

ஸஹாபாக்கள் மீது அவதூறுகளைக் கட்டி, அவற்றை மக்கள் மன்றத்தில் பரப்புகின்றனர். குறிப்பாக அஹ்லுல் பைத்தைச் சேர்ந்தோரை, அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தினர் கொன்று விட்டதாகவும், அவர்களை பாதுகாக்க இவர்கள் எவ்வித நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் அஹ்லுஸ்ஸுன்னாக்கள் மீது வீண்பழிகளை சுமத்துகின்றனர்.

இவ்வாறு ஹுஸைன் ؓ அவர்கள் மீது தமக்கு இருக்கும் அன்பை பறைசாற்றவும், அவர் படுகொலை செய்யப்பட்ட துக்கத்தைக் கொண்டாட இஸ்லாம் அனுமதிக்காத முறைகளைக் கையாழ்வதும் இஸ்லாம் முற்றாக தடைசெய்த அம்சங்களுள் ஒன்றாகும். அஹ்லுல் பைத்தை நாம் நேசிக்க வேண்டுமே தவிர இவ்வாறான

1 அறிவிப்பவர்: அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ؓ, நூல்: புஹாரி 1294, முஸ்லிம் 103.
2 அறிவிப்பவர்: அபூ மூஸா அல்அஷ்அரீ ؓ, நூல்: புஹாரி 1296, முஸ்லிம் 104.

செயற்பாடுகளில் இறங்கி துக்க தினம் கொண்டாடுவது எம்மை வழிதவறிய கூட்டத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும். அதன் மூலம் நாம் இஸ்லாத்தை விட்டே வெளியேறும் நிலை ஏற்படும்.

இது ஒரு வகையான துக்க தினமாக ஷீஆக்கள் கருதி வந்தாலும் வேறு சிலர் இத்தினத்தை யூதர்கள் போன்று மகிழ்ச்சிகரமான கொண்டாட்ட தினமாக கருதுகின்றனர்.

இத்தினத்தில் பெண்கள் தம் கைகளிலும், கால்களிலும் மெஹெந்தி வைத்துக்கொள்கின்றனர். ஆண், பெண் இருபாலரும் கண்களில் சுருமா வைக்கின்றனர். குடும்பத்தினரை அழைத்து விருந்தோம்பல் செய்கின்றனர். ஏழை எழியோருக்கு பல உதவிகளை செய்கின்றனர். புத்தாடைகள் அணிந்து, வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்கின்றனர். இரவில் பிரத்தியேக தொழுகைகளில் ஈடுபடுகின்றனர். வீடுகளைப் பெருக்கி, கழுவி, சுத்தம் செய்து வீட்டின் படுக்கையறை உட்பட அனைத்து தளபாடங்களையும் புதுப்பிக்கின்றனர். விளையாட்டு நிகழ்ச்சிகளையும், பொழுதுபோக்கு அம்சங்களையும் இத்தினத்திற்கென பிரத்தியேகமாக செய்கின்றனர். இவ்வாறாக பெருநாள் தினம் போன்று இத்தினத்தை கொண்டாடுகின்றனர்.

மதீனாவிற்கு நபியவர்கள் வந்த போது யூதர்கள் இவ்வாறான கொண்டாட்டங்களில் ஈடுபடுவதைக் கண்டு முஸ்லிம்களும் அவ்வாறு செய்யக் கூடாது என்பதற்காக நோன்பு நோற்பதை மாத்திரமே வழியுறுத்தினார்கள். எனவே முஹர்ரம் மாதமும் சரி, முஹர்ரம் மாதத்தின் பத்தாம் நாளும் சரி ஷீஆக்கள், அஹ்லுல் பைத்துக்களைப் பின்துயர்வோர் போன்று துக்கத்தையும், யூதர்கள் போன்று சந்தோசத்தையும் வெளிப்படுத்தும் தினம் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

முடிவுரை

எனவே இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாத்தின் எதிரிகளின் சூழ்ச்சியால் தோற்றுவிக்கப்பட்ட பல வழிகெட்ட பிரிவுகளாலும், சிந்தனைகளாலும் இஸ்லாத்தில் புதிதாக பல சடங்குகளும், சம்பிரதாயங்களும் தோற்றம் பெற்றன. அவை திட்டமிட்ட உட்புகுத்தலாகவும், ஆராய்ச்சியின் விபரீத முடிவுகளாகவும், பிறமத சகோதரர்களுடன் ஏற்பட்ட அளவுக்கு மீறிய நட்புறவாகவும் இஸ்லாத்தை தடம்புரழச் செய்யும் முயற்சியாக மாறிவிட்டன.

இவ்வாறான சடங்கு, சம்பிரதாய கொண்டாட்டங்களில் ஈடுபட்டு எமது தூய இஸ்லாமிய கொள்கையை விட்டும் வெளியேறாமல் எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இம் மாதத்தில் இஸ்லாம் கடைபிடிக்குமாறு கூறியுள்ள நோன்பு நோற்பதையும், சண்டை சச்சரவுகளில் ஈடுபடாமல் இருப்பதையும் மாத்திரம் செய்து, இம் மாதத்தின் முழுப் பயனையும் அடைய வேண்டும். இதன் மூலம் அல்லாஹ் எமது நன்மைகளை உயர்த்தி, பாவங்களை அழித்து நாளை மறுமையில் பிர்தவ்ஸ் எனும் சுவனத்தில் நுழைவிப்பானாக.